உ

கடவுள்துணை.

# மதுரை-மீனாட்சியம்மாள் திருவாய்மலர்ந்தருளிய கிளிப்பாடல்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். இ.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1914

17-18 ஞானத்தியப்ப முதலிவீதி மதராஸ் என், இ.

கடவுள் துணை.

# கிளிப்பாடல்.

ஆதிசிதம்பரத்தே கிளியே
    ஆடிவணங்கிக்கொண்டு
சோதியிலக்கணத்தை கிளியே
    சொல்லுகிறேனுனக்கு
ஆதிமத்தியாந்தமில்லை கிளியே
    ஆனந்தரூபமடி
சோதியிலேயிருந்து கிளியே
    சுத்தவெளிபிறந்து
வாய்வுமக்கினியுங் கிளியே
    வந்தது அப்புமண்ணு
மேவுஞ்சராசரமுங் கிளியே
    யெல்லாவுலகமுமே
பேயாமுலகத்திலே கிளியே
    பேதம்பிறந்ததடி
தாயுமலடியடி கிளியே
    தன்னைமறந்தாண்டி
ஐந்துபூதமடி கிளியே
    அண்டபிண்டாதிகளும்

வஞ்சனையாலேஎன்னை கிளியே
வஸ்துமறந்ததடி
கொஞ்சமல்லவடி கிளியே
கோரனைஎத்தனையோ
நஞ்சையுண்ணுதே கிளியே
நாசமாகுமடி
ஐஞ்சையும்வேண்டாதே கிளியே
அச்சுவளருமடி
நெஞ்சையடக்கடியே கிளியே
நேமங்களேதுக்கடி
தேகத்தைநம்பிஅன்னே கிளியே
ஜெனனம்வந்ததடி
மோகத்தைதள்ளடியா கிளியே
முத்திகிடைக்குமடி
காமமேதுக்கடி கிளியே
கன்மவினைகளண்ணே
நேமமில்லாமல் கிளியே
நிச்சயமானதடி
சமயம்வேணுமடி கிளியே
சாதனம்வைத்ததினுல்
காயமற்றவிடம் கிளியே
சற்குருபாதமடி
தீர்த்தமாடுவதும் கிளியே
தேவிபூசைகளும்

எத்தனைநிஷ்டைகளுங் கிளியே
　　யெவ்வெவ்விரதங்களும்
ஆலயந்தேடுவதுங் கிளியே
　　ஆசாரங்கூடுவதும்
சாலமனந்தெளிவுங் கிளியே
　　சற்குருசேவைகளும்
ஜெபங்கள்வேணுமடி கிளியே
　　ஸ்ரீ குருசேவைகளாந்
தபசாகவந்தவற்கு கிளியே
　　தன்மயமாகுதடி
நித்தியாநித்தியங்கள் கிளியே
　　நினைவுமுற்றவர்க்கு
பத்திவிளக்குமடி கிளியே
　　பாசமொழியுமடி
அனித்தியந்தேகமென்று கிளியே
　　யாரறிவார்களிதை
முனிச்சனங்களுக்கும் கிளியே
　　மோகமொழியவில்லை
தன்னையறியவேணுங் கிளியே
　　சஞ்சலந்தீரவேணும்
என்னவடித்தாலுங் கிளியே
　　இருவினைபோகவில்லை
காயத்தைநம்பாதே கிளியே
　　கற்பிதமாகுமடி

ஆபன்குருபதத்தை கிளியே
ஆராயவேணுமடி
மாயமலடியடி கிளியே
மக்களுமில்லையடி
மாயத்தையென்னசொல்வேன் கிளியே
மௌனமல்லவடி
அறிவுகெட்டவர்க்கு கிளியே
ஆசாரஞ்சொன்னபடி
அறிவறிந்தவர்க்கு கிளியே
ஆசாரமேதுக்கடி
சரியைகிரியைமுதல் கிளியே
சாலோகமாகிவரும்
திருவடிநாசமடி கிளியே
சின்மயங்கண்டவுடன்
மனமடங்காமல் கிளியே
மயக்கந்தீராமல்
ஆனந்தமாகுமடி கிளியே
ஆசைவசமானல்
அடக்கவேணுமடி கிளியே
ஆகாக்கருவிதனை
முடுக்கவேணுமடி கிளியே
மோட்சமாகுமடி
உற்றுப்பாராமல் கிளியே
உலகந்தோற்றுதடி

உற்றுப்பாரடியோ கிளியே
உன்மத்தமாகுதடி
சாதிக்குலங்களில்லை கிளியே
சமயமில்லையடி
ஊதிப்பாரடியே கிளியே
உனக்குள்ளேவெளியாம்
வேதம்படித்தாலும் கிளியே
வெளியாகமாட்டாதடி
போதமறிந்தவர்க்கு கிளியே
போக்குவரந்தெரியும்
கர்மயோகங்களும் கிளியே
கற்பிதமாகுமடி
வர்மமறியாமல் கிளியே
வந்தது அப்புமண்ணு
பிறவிபொய்யடியே கிளியே
போதமறிந்தவர்க்கு
தலங்களேதுக்கடி கிளியே
தத்துவமுற்றவர்க்கு
குறைகளில்லையடி கிளியே
குருபதங்கண்டவர்க்கு
புளகங்களற்றதடி கிளியே
பூரணங்கண்டவர்க்கு
ஆலயந்தேடுமடி கிளியே
ஆலயஞ்சுத்தவேண்டாம்

ஆலயமானதுபோல் கிளியே
ஆத்மாவைப்பாரடியோ
அத்தையறியாமல் கிளியே
அலையுதேயுலகம்
வித்தையிதுவடியே கிளியே
வேதாந்தலையிதுவோ
கண்டவருண்டானல் கிளியே
கண்டுமேவர்பாதம்
தொண்டுபண்ணடியோ கிளியே
தோஷங்கள்தீருமடி.
சொல்லலாகாது கிளியே
சொல்லவும்வேணுமடி
பொல்லாருடனுரைத்தால் கிளியே
பொல்லாப்புவந்துவிடும்
ஓடுமனத்தோர்க்கு கிளியே
யுபதேசமேதுக்கடி
வீடுவெளியாமோ கிளியே
மெய்யாகவேண்டாமோ
கலகமுண்டானல் கிளியே
காலனுமுண்டடியோ
நினைக்கவேணுமடி கிளியே
நித்தியரூபத்தினலே
பத்தியுண்டானல் கிளியே
பார்வையுரைக்குமடி

# கிளிப்பாடல்.

வத்துவிலங்குமடி கிளியே
வாராதுஜன்மவினை
மனம்வெறுத்தவர்க்கு கிளியே
வையகம்பாழடியோ
கனவுகண்டதுபோல் கிளியே
காயமும்மப்படியோ
நாணியில்லையடி கிளியே
நாண்முறையில்லையடி
தானுமில்லையடி கிளியே
தன்மயம்கண்டவிடம்
வித்தாரமேதுக்கடி கிளியே
விசுவாசமேதுக்கடி
சுத்தநிலைகிடைத்தால் கிளியே
சுகானந்தமுண்டாமடி
பிரமமேதுக்கடி கிளியே
பின்னேயொன்றுமில்லை
பிரமஞ்சிதம்பரமே கிளியே
பேறானமுத்தியடி
மதுரைமீனாட்சியம்மாள் கிளியே
மகிழ்ந்துரைத்ததமிழ்
இதமாய்ப்படிப்போர்க்கு கிளியே
யெல்லாச்சுகந்தருமே.

கிளிப்பாடல் - முற்றிற்று.